சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

செய்திமடல் - 26 | 17-11-2011



## 10-11-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

### தலைப்பு : ஈழத்துப் போர்க்காலக் கவிதைகள்

போர்க்காலக் கவிதைகள் என்று கதைக்கும் போது போர்க்காலம் எது என்பதன் வரையறை பற்றி பற்றி முதலாவது கேள்வி எழுப்பப் பட்டது

1950 களில் சுதந்திரம் நாளேட்டில் வெளிவந்த கவிதைகள் பெரும்பாலும் போர்குணம் வாய்ந்ததாகவே உள்ளது என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

1950 களிலிருந்தே பிரச்சனைகளும் அதற்கெதிரான போராட்டங்களும் இருந்து கொண்டே வந்ததால் எதைப் போர்க்காலம் என்பது பிரச்சனைகளின் ஆரம்ப கட்டத்தையா அல்லது அல்லது தற்போது முடிவுக்கு வந்த ஆயுதப் போரக்காலத்தையா என்று ஒரு கேள்வி எழுப்பப்பட்டது.

போர்க்காலக் கவிதைகள் என்ற கரு எதற்காக இந்த சந்தர்ப்பத்தில் எழுப்பப்பட்டது என்ற கேள்வி எழுப்பபட்டது.

போர்க்கால கட்டத்தில் எழுதப்பட்ட கவிதைகளை ஆய்வுக்கு உட்படுத்தவேண்டிய தேவை ஏன் வந்தது மற்றும் அதை விளங்கிக் கொள்வதற்கான சூழல் என்ன என்று கேட்கப்பட்டது.

கவிதையை ஒரு அடிக்கட்டுமானமாக எடுத்துக் கொண்டால் போர்க்காலக் கவிதைகளில் அரசியல்,வரலாறு,அழகியல்,சமூகவியல் என்ற மேட்கட்டுமானங்கள் இருக்கவேண்டும்.
இக்கவிதைகளை மீள வாசிப்பு செய்வதென்றால் மீள்விசாரணை ஒன்று செய்தாகவேண்டும்.

இந்தக் கவிதைகளை எப்படிப் பார்ப்பது? போர் என்ற ஒன்று சாதாரணமாக நடந்துமுடிந்த ஒன்றல்ல.

மீள்விசாரணை ஒன்றின்போது போராட்டத்தரப்பு, எதிர்த்தரப்பு, சார்புநிலை ஆகியவற்றை கேள்விக்குட்படுத்தும் போது அதை ஆய்வு செய்வோரின் அரசியல் தளம் என்பது முக்கியமானது.
இந்த தலைப்பில் ஆய்வு செய்தல் என்பது அரசியல் , கவிதை என்ற இரண்டிலும் பரினாமித்துள்ள ஒருவராலே செய்யப்படவேண்டியது என்று சொல்லப்பட்டது.

போர்க்காலத்தில் போருக்கெதிரான கவிதைகளும் வந்தன அதனால் இதைப் போர்க்காலக் கவிதைகள் என்பதா அல்லது போர்க்கவிதை என்பதா?

1980 க்குப் பின்னான காலத்தை போர்க்காலமாக எடுத்துக்கொண்டு அதற்கு முற்பட்ட காலத்தை போருக்கான அரசியல் பின்னணியாக எடுத்துக்கொள்ளலாம் என்பது ஆய்வு வசதிக்காய் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து வந்த பிரச்சாரக் கவிதைகள் பற்றி கேள்வி எழுப்பட்டது.

பெரும்பான்மையான் போர்க்காலக் கவிதைகள் கிடைக்க முடியாதநிலையில் உள்ளன.

வெளிவராத ஆக்கங்கள் என்பன பற்றியும் கேள்வி எழுப்பப்பட்டது.

1980 க்கு பின் வந்த கவிதைகள் அதற்கு முன்வந்த கவிதைகளில் இருந்து இன்னுமொரு உச்சத்திற்கு செல்கின்றன.

சிவரமணி செல்வி ஆகியோரின் கவிதைகளை போர்க்காலக் கவிதைகள் என்பதா அல்லது பெண்ணியக் கவிதைகள் என்பதா?


போர்க்காலக்கவிதைகள் வெளிவந்த இதழ்களும் நூல்களும் ஆவணப்படுத்தப்படவில்லை என்ற ஆதங்கத்துக்கு, noolaham.org, tamilarangam.net போன்றவை மிகவும் சிறப்பான முறையில் இவ் ஆவணப்படுத்தல் பணிகளைச் செய்துவருகின்றன என்ற பதில் வழங்கப்பட்டது.

## அடுத்து வரும் தலைப்புக்கள்

**சமஸ்கிருத மயமாக்கம்**
17-11-2011 | சத்தியதேவன்

**சோதிடம் : ஒரு விமர்சனப்பார்வை**
24-11-2011 | மௌ. மதுவர்மன்

**யாப்பிலக்கணமும் செய்யுளும்**
01-12-2011 | ஜின்னா ஷரிபுதீன்



Georg Wilhelm Friedrich Hegel, கியார்க் வில்ஹெம் ஃபிரீடரிக் ஹெகல், ( [ˈgeɔʁk ˈvɪlhɛlm ˈfʁiːdʁɪç ˈheːgəl], ஆகஸ்ட் 27, 1770 - நவம்பர் 14, 1831) என்பவர் ஒரு புகழ்மிக்க இடாய்ச்சு நாட்டு (செருமனிய) மெய்யியல் அறிஞர் ஆவார்.

எதுவும் என்றும் நிலையாக இருப்பதில்லை. எல்லாம் இடைவிடாமல் இயங்கிக் கொண்டேயிருக்கின்றன. ஒவ்வொரு பொருளிலும் பரஸ்பரம் முரண்பட்ட சக்திகள் உள்ளடங்கியுள்ளன. அவை ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டிருக்கின்றன. இந்த மோதல்களின் விளைவாக அந்தப் பொருள் அழிகிறது. அதனுடைய அழிவிலிருந்து அதைக் காட்டிலும் வளர்ச்சியடைந்த இன்னொரு பொருள் உருவாகிறது. இவ்வாறு புதிதாகத் தோன்றுகிற பொருளுக்குள்ளும் பரஸ்பரம் முரண்பாடான சக்திகள் இருக்கின்றன. அவற்றுக்கிடையே மோதல் நடைபெறுகிறது. இவ்வாறு நிரந்தரமான மாறுதல்கள். அல்லது ஒன்றின் அழிவும் அதைக் காட்டிலும் வளர்ச்சியடைந்த இன்னொன்றின் தோற்றமும் நடைபெறுவதன் மூலமாகத்தான் பிரபஞ்சம் இயங்கி வருகிறது என்று நிறுவியவர் ஹெகல்.

## சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.


சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## சமஸ்கிருதமயமாதல் / மேல்நிலையாக்கம் (Sanskritization)

*17-11-2011* **அன்று உரையாடப்படவுள்ள விடயப்பரப்பு**
*(ச. சத்தியதேவன்)*

சமஸ்கிருத மயமாதல் அல்லது மேல்நிலையாக்கம் என்பது இந்தியச் சமூகவியலுக்குரிய ஒரு கோட்பாடாகும். சிக்கலான சாதிய அமைப்புக் கொண்ட இந்தியச் சமூகங்களில் நிகழ்கின்ற சமூக அசைவியக்கத்தை இக்கோட்பாடு முன்வைக்கிறது. 1952ல் இந்திய சமூக வியலாளரான எம்.என் சிறிநிவாஸ் எனும் இந்திய சமூகசவியலாளர் இக்கோட்பாட்டை முன்வைத்துப் பின்னர் பலநிலைகளில் விரிவுபடுத்தினார். நவீன இந்திய சமூகவியலாளர் சிலர் இக்கோட்பாட்டை மறுதலித்துள்ளனர். இன்னும் சிலர் சிறிநிவாஸின் கோட்பாட்டிலுள்ள போதமைகளை சுட்டிக்காட்டி அவற்றை இன்னும் விரிவுபடுத்தியுள்ளனர். இன்னும் சிலர் இக்கோட்பாட்டை எதிர்த் எதிர்த்து சமஸ்கிருதமயமாதல் அல்லது கீழ்நிலையாக்கம் எனும் கோட்பாட்டையும் முன்வைத்துள்ளனர். இதிலிருந்து சிறிது வேறுபட்டு வரலாற்றியலாளரான கா.இந்திரபாலா 'சமஸ்கிருதமயமாதல்' என்பதை வரலாற்றில் ஆதி சமூகங்களிடையேயான பண்பாட்டு பரவலை விளக்குவதற்கு பயன்படுத்துகிறார்.

இந்திய சமூகங்களில் சமஸ்கிருத மயமாக்கல் என்பது என்ன? இந்திய சமூகங்களில் சமஸ்கிருத மயமாக்கல்எவ்வாறு நிகழ்கிறது?

சமஸ்கிருதமயமாக்கலுக்கு பதிலாக 'மேல்நிலையாக்கம்' , ' உயர் குடியாக்கம்' ஆக்கிய சொற்கள் பயன்படுத்த பட்டமைக்கு காரணங்களும் அவற்றிக்கான தேவைகளும் என்ன?

எம்.என். சிறிநிவாஸ் முன்வைக்கும் மேல்நிலையாக்கம், மேற்கத்தியவாக்கம, கீழ்நிலையாக்கம் போன்றவையும். பிராமண வகை, சத்திரியவகை, வைசியவகை மற்றும் சூத்திர வகை மேல்நிலையாக்கங்கள்.

சமஸ்கிருத மயமாதல் எதிர்கும் சிந்தனையாளர்களின் கருத்துக்கள்

சிறிநிவாசுக்கான மாற்றுக் கோட்பாடுகள் 'உறவின் முறையாக்கம்'

இந்துமயமாதலும் பிற சமயம் தழுவலும்

தமிழ் சமூகதிற்கு சமஸ்கிருத மயமாதலின் பொருத்தபாடுகளும் முரண்பாடுகளும் - பேரா.பக்தவத்சலபாரதியின் கருத்துக்கள்

வரலாற்றில் 'சமஸ்கிருதமயமாதல்' பேரா.கா.இந்திரபாலாவின் கருத்துக்கள்.

திராவிட இயக்க சிந்தனையாளர்கள் முன்வைக்கும் 'எதிர் சமஸ்கிருதமயமாதல்' / 'கீழ்நிலையாக்கம்'

சமஸ்கிருதமயமாதல் இலங்கை உதாரணங்கள்



யாரைப்போல்...??
எல்லோரும் கேட்கிறார்கள்
'யாரைப்போல'
என் சந்ததி..அவன் சந்ததி..
எல்லாம் இழுத்தாயற்று
... யாரைப்போல்..?
ம்..நெற்றி அவனைப்போல்.
மூக்கு என்னது.
கண் அவன்.. புருவம் நான்..
வாய் நானும் அவனும்..
முகம்..அந்த வட்ட வடிவம்?
அவன்..
சொக்கு...?.நான்
ம்ம்....காது? அவன்!
யாரைப்போல் ?
நானா ?அவனா?
அது.. அதைப்போல்!"புதியது"!
பெயரும் வைத்தாயற்று
என்னைப்போலோ..அவனைப்போலோ..
அல்லது யாரையும் போலோ
இருக்கவேண்டுமா என்ன??

ம. தேவகௌரி

உழைப்பைச்சுரண்டிப் பெருக்கப்பட்ட மூலதனத்தைக் கொண்டிருப்பவர்களைக் காத்து நிற்கும் அதிகாரப்படிநிலை ஒழுங்கினை இப்படம் விளக்குகிறது. சட்டம் ஒழுங்கு என்ற பெயரிலும் "பாதுகாப்பு" என்ற பெயரிலும் நிலவும் இந்த அடிகாரப் படிநிலைகள் எவருக்குச் சேவகம் செய்கின்றன என்பதை இப்படத்தப் பார்த்ததும் புரிந்துகொள்ளலாம். இதுவே இன்றைய உலக ஒழுங்கும்கூட.

நன்றி: http://francoistremblay.wordpress.com/2008/08/19/the-pyramid-of-the-capitalist-system/




### வலை

**கூடங்குளம் அணுஉலையை ஏன் ஏற்றுக்கொள்ள முடியாது?**

கூடங்குளம் அணு உலையை ஏன் எதிர்க்கவேண்டும் என எளிமையாகவும் ஆழமாகவும் விளக்கும் கட்டுரை. இதனை எழுதி இருக்கும் இருவரும் அணு உலைகளுக்கெதிரான போராட்டத்தை முன்னெடுத்துவரும் இயற்பியலாளர்களாவர்.

இலகு முகவரி : **valai.thulaa.net/47**
http://poovulagu.blogspot.com/2011/11/blog-post_6613.html

**உலகமயமாக்கப் பின்னணியில் பண்பாடும், வாசிப்பும்**

உலகமயமாதல், அதன் விளைவுகள், பண்பாட்டுப் படையெடுப்புக்குறித்த உரை. மிக எளிமையாக உலகமயமாக்கத்தின் கேடுகளை விளக்கிச்செல்கிறது.

இலகு முகவரி : **valai.thulaa.net/48**
http://maduraivaasagan.wordpress.com/2011/02/28//தொ-பரமசிவன்-உரை-உலகமயமாக

**குறும்படம் : நடந்தகதை**

தமிழகத்தில் இன்றும் நிலவும் சாதி ஒடுக்குமுறை பற்றிய உணர்வுபூர்வமான கதையினைக்கொண்டிருக்கும் இக்குறும்படம் 16 விருதுகளைப் பெற்றுள்ளது.

இலகு முகவரி : **valai.thulaa.net/49**
http://youtu.be/H7Pja1ujH9Y

**சமூக விஞ்ஞான கல்வி வட்டத்தின் கேள்விகள்**

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் facebook குழுமத்தில் கேட்கப்பட்ட பல கேள்விகளுக்கு கலையரசன் அவ்வப்போது அளித்த பதில்களின் தொகுப்பு. சமூகம், அரசியல் தொடர்பான கேள்விகள் இதில் அடங்குகின்றன..

இலகு முகவரி : **valai.thulaa.net/50**
http://kalaiy.blogspot.com/2011/09/blog-post.html

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.